செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 342 நாள்: 12/6/18

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
வேலூர்
நாள்: 01.06.2018

# பத்திரிக்கை செய்தி

வேலூர் மாவட்டத்தில் அரசு அனுமதியின்றி செம்மண், மண் மற்றும் வண்டல் மண் ஆகிய கனிமங்களை அரசு புறம்போக்கு நிலங்களிலிருந்தும் பட்டா நிலங்களிலிருந்தும் வனப்பகுதியையொட்டி காணப்படும் அரசு புறம்போக்கு/பட்டா நிலங்களிலிருந்தும் சட்டவிரோதமாக சூளைக்கு மண் எடுத்தும் விவசாயத்திற்காக அனுமதிக்கப்பட்ட ஏரி மண் எடுத்து சட்ட விரோதமாக சூளைக்கு பயன்படுத்தியும் ஆற்றுப்படுகைகள் மற்றும் மலைசார்ந்த இடங்களில் அரசு அனுமதியின்றி கற்களை வெட்டி எடுத்து செல்லப்படுவது தெரியவரும் பகுதிகளில் சம்மந்தப்பட்ட சார் ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர், வட்டாட்சியர் மற்றும் உதவி இயக்குநர் (கனிமம்) அவரவர் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் கனிமவளத்தை ஆய்வு செய்யும்போது கண்டறியப்பட்டால் காவல் துறையின் மூலம் வழக்கு பதிவு செய்தும் உரிய அபராதம் விதித்தும் நடவடிக்கை எடுக்கப்படும் என இதன் மூலம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

// உத்தரவுப்படி //